
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1145

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

53

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# 'பாலைவன ரோஜாக்கள்' அதிகாரத்திற்கு எதிரான முழக்கம்!

1986-ஆம் ஆண்டு, அன்றைய ஆளும் கட்சியின் அவலங்களை எதிர்த்துப் போராடும் 'நமது நாடு' பத்திரிகை ஆசிரியர் சபாரத்தினம் எனும் இளைஞனைக் கதாநாயகனாகக் கொண்டு, கலைஞர் திரைக்கதை-வசனம் எழுத, 'முரசொலி' செல்வம் பூம்புகார் புரொடக்‌ஷன் சார்பில் தயாரிக்க, மணிவண்ணன் இயக்கத்தில் வெளிவந்த திரைப்படம், 'பாலைவன ரோஜாக்கள்.' படத்திற்கு இசை இளையராஜா.

இப்படத்தில் சத்யராஜ், பிரபு, லட்சுமி, நளினி, ஜனகராஜ், டெல்லி கணேஷ், வினுசக்கரவர்த்தி, மலேசியா வாசுதேவன், சாருஹாசன் உள்ளிட்ட இன்னும் ஏராளமான நடிகர்கள் நடித்துள்ளனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் கலைஞரின் கதை-வசனத்தில் நடிக்கப் பலரும் தயங்கிய சூழலில், இப்படத்தில் முன்னணி நடிகர், நடிகையர் பலர் நடித்துள்ளதும் அன்று முன்னிலையில் இருந்த இயக்குநரான மணிவண்ணன் இப்படத்தை இயக்கியுள்ளதும் வியப்பானதாக இருக்கிறது. மணிவண்ணன், கலைஞரின் இன்னும் சில படங்களையும் இயக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்திரைப்படம் முழுக்க முழுக்க ஓர் அரசியல் திரைப்படமாக அமைந்துள்ளதுடன், எம்.ஜி.ஆர். ஆட்சியின் அவலங்களை, அதிகார முறைகேடுகளை மறைமுகமாகவும் மிகக் கடுமையாகவும் விமர்சனம் செய்கிறது.

### திரைப்படத்தின் கதை

மும்பையில் இருந்து சென்னைக்குத் திரும்பி வரும் சபாரத்தினம் (சத்யராஜ்) 'நமது நாடு' பத்திரிகை ஆசிரியராகப் பொறுப்பேற்பதற்கு முன், தன் தாத்தாவிடம் (சாருஹாசனிடம்) வாழ்த்துப் பெற செல்கிறான்.

அவர், "எச்சூழலிலும் நேர்மை தவறாதே" என்று அவனிடம் சொல்லி, தனது பேனாவைப் பரிசளிக்கிறார். அவர் சொல்படி சபாரத்தினம் ஆட்சியாளரின், அதிகாரிகளின் மக்கள் விரோதப் போக்குகளை எதிர்த்து 'நமது நாடு' பத்திரிகையில் எழுதி அம்பலப்படுத்துவதால், அவர்களின் பகையைச் சந்திக்கிறான்.

சட்டத்தை மீறி, கோயிலின் அருகே வி.ஜெ.வி. (விருத்தாசலம் ஜம்புலிங்கம் மகன் வேதாச்சலம் - மலேசியா வாசுதேவன்) நடத்திவரும் சாராயக்கடையை மாவட்ட ஆட்சித்தலைவர் சூர்யா (லட்சுமி) அகற்ற, நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதாக சபாரத்தினம் தனது பத்திரிகையில் எழுதுகிறான்.

இதைக் கண்டு கோபப்படும் சூர்யா (லட்சுமி), காவல் துறை ஏ.எஸ்.பி. (சிவச்சந்திரன்) மூலம் காவலர்கள் உதவியோடு சாராயக் கடையை அகற்றுவதால், வி.ஜெ.வி.யின் கூட்டாளியான அமைச்சர் ஆளவந்தாரின் (வினுசக்கரவர்த்தி) கோபத்திற்கு ஆளாகிறாள். அதே நேரம், சபாரத்தினம் சூர்யாவைப் பாராட்டுகிறான்.

இந்த இடத்தில் பின்னோக்குக் காட்சி வருகிறது. அதில் சபாரத்தினம் தாத்தா வீட்டில்தான் சூர்யாவின் தாயார் சரஸ்வதி (கமலா காமேஷ்) வீட்டு வேலை செய்தார் என்பதும், சபாவின் தாத்தாதான் பணம் செலவு செய்து சூர்யாவைப் படிக்கவைத்து கலெக்டராக்கினார் என்பதும் சொல்லப்படுகிறது. மேலும், சபாவும் சூர்யாவும் இளவயது நண்பர்கள் என்பதும் காட்டப்படுகிறது.



அத்தகைய தன் நண்பன் சபாரத்தினத்திடம் உதவி ஆசிரியராகத் தன் தங்கை ராணியை (நளினி) சூர்யா வேலைக்குச் சேர்த்து விடுகிறாள். ராணியும் சபாரத்தினமும் நெருங்கிப் பழகுவதைக் காணும் சபாவின் தாயார், சூர்யாவைச் சந்தித்து ராணியைப் பெண் கேட்கிறார். ஆனால், இதைக் கேள்விப்படும் சபாரத்தினம், தான் ராணியை விரும்பவில்லை என்று சொல்லி மறுத்துவிடுகிறார்.





படங்கள் உதவி : ஞானம்

இதே நேரத்தில், சூர்யாவின் தம்பி சேகர் (வசந்த்) குடித்துவிட்டு ரவுடித்தனம் செய்கிறான். பணத்திற்காக பாபு (பிரபு) மூலமாக வி.ஜெ.வி.யிடம் வேலைக்குச் சேர்ந்து கடத்தல் தொழிலில் ஈடுபட்டு, போலீஸிடம் மாட்டிக் கொள்கிறான். ஜாமீனில் வெளிவரும் அவனை சூர்யா கண்டிக்கிறாள்.

அதனால், அக்காவுடன் சண்டை போட்டுவிட்டு வெளியேறுகிறான். அவனோடு ராணியும் வீட்டைவிட்டு வெளியேறி, பாபு வீட்டில் போய் அடைக்கலம் புகுகின்றனர். பிறகு, பாபுவையே ராணி திருமணம் செய்துகொள்கிறாள்.

குடிசை வாழ் ஏழை மக்களுக்குப் பட்டா போட்டு கொடுக்கப்பட்ட நிலங்களை மோசடி செய்து, அமைச்சரும் வி.ஜெ.வி.யும் அபகரித்துவிட்டு, குடிசை வாழ் மக்களை காவல்துறை மூலம் அடித்து விரட்டுகின்றனர்.

> **அரசியல் திரைப்படமாக அமைந்துள்ளதுடன், எம்.ஜி.ஆர். ஆட்சியின் அவலங்களை, அதிகார முறைகேடுகளை மறைமுகமாகவும் மிகக் கடுமையாகவும் விமர்சனம் செய்கிறது.**

இச்சம்பவத்தில் மாவட்ட ஆட்சியர் சூர்யா மீது பழிபோட்டு அவரை சஸ்பெண்ட் செய்கின்றனர்.

அமைச்சர் ஆளவந்தார், தொழிலதிபர் வி.ஜெ.வி., ஏ.எஸ்.பி (சிவச்சந்திரன்) சாமியார் (மீசை முருகேசன்) ஆகியோர் கூட்டு சேர்ந்து செய்யும் கள்ளக்கடத்தல், அரசுப் பணத்தை அபகரிப்பது போன்றவற்றை எல்லாம் சபாரத்தினம், தான் ஆசிரியராக இருக்கும் 'நமது நாடு' பத்திரிகையில் அம்பலப்படுத்தி எழுதுகிறான். அதனால் ஆத்திரம் கொள்ளும் எதிரிகள், பாபு (பிரபு) தலைமையில் அடியாட்களை அனுப்பி சபாரத்தினத்தைத் தாக்கி காயப்படுத்துகின்றனர்.

பதிலுக்கு, சபாரத்தினம் வி.ஜெ.வி.யையும் அவனது கூட்டாளிகளையும் தாக்குகிறான். இதனால் பகை மேலும் வளர்கிறது. ராணியைத் திருமணம் செய்துகொண்ட பிறகு, பாபு மனம் திருந்தி, சபாவுடன் இணைந்து அமைச்சர் கும்பலின் திருட்டுத்தனங்களுக்கான ஆதாரங்களை எல்லாம் கைப்பற்ற உதவுகிறான். ஊழல் ஆதாரங்களைச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கின்றனர்.

### கைமாறும் பேனா

மேலும், 'நமது நாடு' பத்திரிகையிலும் சபா எழுதுகின்றான். இதனால் கொதித்தெழும் அமைச்சர் ஆளவந்தார், வி.ஜெ.வி, சாமியார், ஏ.எஸ்.பி. கும்பல் பாபுவைத் தேடி அடியாட்களை அனுப்புகிறது. பாபு கிடைக்காததால் பாபுவின் நண்பன் மஜ்னுவை (ஜனகராஜ்) துரத்துகிறது. ஏ.எஸ்.பி. தனது ஜீப்பில் மோதி மஜ்னுவைக் கொலை செய்கிறான்.

கொலைவெறி கொண்டு அமைச்சரின் ஆட்கள் அலைவதை அறியும் சூர்யா, தனது தங்கை ராணியை அழைத்துக்கொண்டு சபா, பாபு மறைந்திருக்கும் இடத்திற்கு வருகின்றாள். அங்கு ஆதாரங்களை எல்லாம் சபாவும் பாபுவும் காரில் ஏற்றி, இடம் மாற்ற ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றனர்.

சபாவிடம் சூர்யா, உங்கள் உயிருக்கு ஆபத்து என்று கூறிக்கொண்டிருக்கும்போதே ஏ.எஸ்.பி. போலீஸ் ஜீப்பில் அங்கு வந்து சபா, பாபு இருவரையும் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவதுடன் ஊழல் பற்றிய ஆதாரக் கோப்புகள் ஏற்றி வைக்கப்பட்ட காரின்மீது குண்டு வீசி எரித்துவிட்டு அங்கிருந்து செல்கிறார்கள்.

குண்டடிபட்ட பாபு இறந்துபோகிறான். சூர்யாவும் ராணியும் கதறி அழுகின்றனர். தன் தாத்தா கொடுத்த பேனாவை ராணியின் கையில் கொடுத்து, 'அநீதியை எதிர்த்துப் போராடு' என்று சொல்லிவிட்டு, சபாரத்தினமும் சூர்யாவின் மடியில் உயிரை விடுகிறான். ராணி, பேனாவைக் கையில் ஏந்துவதுடன் படம் முடிவடைகிறது.

**...காட்சி விரியும்**

## மக்கள் பதிப்பில் 'தமிழ்ச்சிறுகதையின் தடங்கள்'



2025-ஆம் ஆண்டுக்கான 'சாகித்திய அகாடமி விருது', ச.தமிழ்ச் செல்வன் எழுதிய 'தமிழ்ச்சிறுகதையின் தடங்கள்' என்ற நூலுக்கு அறிவிக்கப்பட்டு, வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் 50 ஆண்டுகள் குறித்து பேசும், இந்த நூலினை, குறைந்த விலையில் மக்கள் பதிப்பாக அச்சிடுவதற்கான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது 'சீர் வாசகர் வட்டம்'.


'பாரதி புத்தகாலயம்' வெளியிட்ட இந்த நூல், 896 பக்கங்கள் கொண்டது. தற்போது ரூ.300 விலையில் வெளியாக உள்ளது. இந்த நூலுக்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதமே சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், சமீபத்தில் முறையான அறிவிப்பு வெளியானது. இந்த அறிவிப்புக்குப் பின்னர், தற்போது வாசகர்களிடம் பரவலாகக் கொண்டு சேர்க்க 'சீர் வாசகர் வட்டம்' குறைந்த விலைப் பதிப்பைக் கொண்டு வர உள்ளது.

"தான் எழுதும் நிலப்பரப்பின் கருப்பொருள்களை எல்லாம், கதையின் ஓட்டத்தில் இயல்பாகப் பின்னிப் பிணைக்கும் எழுத்தாளர் தோழர் ச.தமிழ்ச்செல்வனுக்கு சாகித்திய அகாடமி விருது அறிவிக்கப்பட்டிருப்பதற்கு எனது பாராட்டுகள்! தாமதப்படுத்தினாலும், இறுதியில் சரியான கைகளில் சாகித்திய அகாடமி சேர இருப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். நம் மண்ணின் கதைகள் அனைவரையும் சென்று சேர வாழ்த்துகிறேன்" எனக் கழகத் தலைவர் வாழ்த்திய படைப்பு, அனைவரிடத்திலும் சென்று சேரட்டும். நூலினைப் பெற இந்த எண்ணுக்கு (97893 81010, 95663 31195) வாட்ஸ் அப் செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணி பணியில் பெருமை!



எஸ்.ஆர்.முருகேசன்

2012-ஆம் ஆண்டில், நம் கழகத் தலைவர் அவர்கள் நேர்காணல் செய்து, திருமானூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகச் செயல்பட்டு வந்தேன். 2015-ஆம் ஆண்டு, அன்பகத்தில் நடைபெற்ற மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நேர்காணலில் பங்கேற்றபோது எடுத்த படம் இது. தலைவரிடத்தில் கழக வளர்ச்சி நிதியாக ரூ.5,000 அளித்தது, மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின்கீழ், கிளைக் கழகத் துணைச் செயலாளராகவும், கழகத் தலைவர் தளபதி அவர்களின்கீழ் திருமானூர் ஒன்றியக் கழக அமைப்பாளராகவும், இன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இளம் தலைவர் அவர்களின்கீழ் அரியலூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் பணியாற்றுவதில் பெருமையடைகிறேன்.

**– எஸ்.ஆர்.முருகேசன், சன்னாவூர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், அரியலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நிலாச்சோறு அரசியல்!

1956-ஆம் ஆண்டு, ஜூன் 22-ஆம் தேதி, கழகத்தின் சென்னை மாணவர் மன்றத்தினரும், 'தாய்மார் கழக'த்தினரும் சேர்ந்து, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டையில் முழுநிலா நாளில், நிலாச்சோறு ஆக்கும் நிகழ்ச்சியைக் கொண்டாடினர். ஆண்களும் பெண்களும், சின்னஞ்சிறு குழந்தைகளும் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்டு நிலாச்சோறு ஆக்கி மகிழ்ந்தனர். குடும்பம் குடும்பமாக அரசியல் பேச, அந்த நிகழ்ச்சியை நடத்தியது கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131